பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை

*04 08 2026* *TUESDAY* *6.30 PM*

<u>மாநிலச்செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

*1)* எதிர்க்கட்சித் தலைவர் திரு உதயநிதி ஸ்டாலினை காவல்துறை விசாரணைக்கு பின்னர் விடுவிக்க வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

*2)* தமிழகத்திற்கு 5 ஆயிரத்து 187 சூரிய மின்சக்தி பம்புகள் வழங்கப்பட்டிருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

*3)* தமிழகத்தின் நடப்பு நிதியாண்டுக்கான நிதிநிலை அறிக்கை சட்டப்பேரவையில் நாளை தாக்கல் செய்யப்படுகிறது

*4)* கபினி அணையிலிருந்து திறக்கப்பட்ட உபரி நீர் மேட்டூர் அணையின் நீர்தேக்கப்பகுதிக்கு இன்று மாலை வந்தடைந்தது.

*5)* ஸ்பெயின் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் *Aryan Sha – Sai Karthik Reddy* இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

<u>இனி விரிவான செய்திகள் –</u>

<<<<<<>>>>>>

சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் திரு உதயநிதி ஸ்டாலின் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், இன்றே விசாரணையை முடித்துவிட காவல்துறைக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பெண்கள் குறித்து அவதூறாக பேசிய வழக்கில் திரு உதயநிதியை நீதிமன்ற காவலில் வைக்கும் எண்ணம் இல்லை என்றும், விசாரணைக்கு பிறகு காவல் நிலைய ஜாமீனில் விடுவிப்பதாக தமிழக அரசு சார்பில் உயர்நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து, இன்றே விசாரணை மேற்கொள்ளுமாறும், திரு உதயநிதி ஸ்டாலின் விசாரணைக்கு ஒத்துழைக்க வேண்டும் என்றும் நீதிமன்றம் கூறியுள்ளது.

ஏற்கனவே திரு உதயநிதி கைது செய்யப்பட்டுள்ள நிலையில், முன்ஜாமீன் மனு ஏற்புடையது அல்ல என்றும், அரசின் தலைமை வழக்கறிஞர் தெரிவித்த உத்தரவாதத்தை ஏற்று வழக்கை முடித்து வைப்பதாகவும் கூறியுள்ளது.

தஞ்சாவூரில், காவிரி விவகாரம் தொடர்பான போராட்டத்தின்போது பெண்கள் குறித்து அவர் அவதூறாக பேசியதாக கூறி இன்று காலை சென்னை நீலாங்கரையில் உள்ள அவரது இல்லத்தில் கைது செய்யப்பட்ட எதிர்க்கட்சித் தலைவர், சற்றுமுன் தஞ்சாவூர் செங்கிப்பட்டி காவல் நிலையத்திற்கு அழைத்து செல்லப்பட்டார்.

<<<<<<>>>>>>

சூரியமின்சக்தி திட்டத்தின்மூலம், நாடு முழுவதும் வேளாண் நிலங்களுக்கான மின் வசதி மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மத்திய மின்துறை இணையமைச்சர் திரு ஸ்ரீபத் யசோ நாயக் கூறியுள்ளார்.

மாநிலங்களவையில் எழுத்து மூலம் அளித்த பதிலில் இதனை தெரிவித்துள்ள அவர், தமிழகத்திற்கு 5 ஆயிரத்து 187 சூரிய மின்சக்தியில் இயங்கும் பம்புகள் வழங்கப்பட்டிருப்பதாக தெரிவித்துள்ளார்.

பிரதமரின் மத்திய நிதியுதவித் திட்டத்தின்கீழ், சூரிய சக்தியில் இயங்கும் மின்வசதிகளை பெற்றுக் கொள்ளலாம் என்று அவர் கூறியுள்ளார்.

தமிழகத்தில் சிறு மற்றும் விளிம்பு நிலை விவசாயிகளுக்கான நிதியுதவி 30 முதல் 50 சதவீதம் வரை மாநில அரசு வழங்குவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

விவசாயிகள், கூட்டுறவு அமைப்புகள் மற்றும் வேளாண் தொடர்பான அமைப்புகள் மத்திய அரசின் இந்த திட்டம் குறித்த விழிப்புணர்வை அனைவருக்கும் வழங்க வேண்டும் என்று திரு ஸ்ரீபத் யசோ நாயக் வலியுறுத்தினார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தின் 2026-27-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை சட்டப்பேரவையில் நாளை தாக்கல் செய்யப்படுகிறது

தவெக தலைமையிலான அரசு பதவியேற்ற பின்னர் முதல் முறையாக பட்ஜெட் தாக்கல் செய்யப்படுகிறது.

நாளை மறுநாள் வேளாண் துறைக்கான பட்ஜெட் தாக்கல் செய்யப்படும் என்று சட்டப்பேரவைத் தலைவர் திரு J C D பிரபாகர் கூறியுள்ளார்.

பேரவைத் கூட்டத்தொடர் எத்தனை நாட்கள் நடைபெறும் என்று நாளை பிற்பகல் நடைபெறும் சட்டப்பேரவை அலுவல் ஆய்வுக்குழு கூட்டத்தில் முடிவு செய்யப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, கொள்கை விளக்க குறிப்பு, சட்டப்பேரவை மானிய கோரிக்கை அறிவிப்புகள் தொடர்பான ஆய்வுக்கூட்டம் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு காந்திராஜ் தலைமையில் இன்று சென்னையில் நடைபெற்றது.

<<<<<<>>>>>>

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான செயல்திட்ட மாநில மன்றக்கூட்டம் இன்று சென்னை தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் திரு விஜய் தலைமையில் நடைபெற்றது.

இதுதொடர்பாக மாநில அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், ஆதிதிராவிடர் நலத்திட்டத்திற்காக 5 ஆயிரத்து தொள்ளாயிரத்து மூன்று கோடி ரூபாயும், பழங்குடியினர் நலத்திட்டத்திற்காக 349 கோடி ரூபாயும் செலவிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு ஒதுக்கப்படும் நிதி பயனாளிகளுக்கு முழுமையாக பயன்படுத்தப்பட வேண்டும் என்றும், திட்டத்தின் செயல்பாடுகளை கண்காணிக்க வேண்டும் என்று இதில் கலந்துகொண்ட அமைச்சர்களுக்கும், அதிகாரிகளுக்கும் முதலமைச்சர் அறிவுறுத்தியதாக அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

மேலும், சென்னை ஓபன் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டி நடத்த 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து முதலமைச்சர் திரு விஜய் அறிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

எல்-நினோ-வினால் தமிழகத்தில் ஏற்படவுள்ள பாதிப்புகள் குறித்து கண்காணிக்க அமைக்கப்பட்ட குழுவின் முதல் கூட்டம் மாநில அமைச்சர் திரு கே ஏ செங்கோட்டையன் தலைமையில் இன்று சென்னையில் நடைபெற்றது.

இதுதொடர்பாக, மாநில அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், தென்மேற்கு பருவமழை வழக்கமாக 133 புள்ளி ஏழு ஐந்து மில்லி மீட்டர் மழை பெய்யும் நிலையில், நடப்பு நிதியாண்டில் இதுவரை 111 புள்ளி ஒன்று ஒன்பது மில்லி மீட்டர் மழை மட்டுமே பெய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் உள்ள 38 மாவட்டங்களில் 24 மாவட்டங்களில் வழக்கத்தைவிட குறைவாகவே தென்மேற்கு பருவமழை பெய்துள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

கபினி அணையிலிருந்து திறக்கப்பட்ட உபரி நீர் மேட்டூர் அணையின் நீர்தேக்கப்பகுதிக்கு இன்று மாலை வந்தடைந்தது.

கபினி அணை நிரம்பி வருவதால், திறந்துவிடப்பட்ட உபரி நீர் மூன்று நாட்களுக்கு பிறகு மேட்டூர் வந்தடைந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>>

கோவை மாவட்டத்தின் மலைப்பகுதிகள், நீலகிரி, தேனி உள்ளிட்ட மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

<<<<<<>>>>>>

***<u>மாவட்டச் செய்திகள்</u>***

***இராணிப்பேட்டை மாவட்டம், நெமிலி ஊராட்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார திட்டத்தின்கீழ் 24 லட்சம் ரூபாய் மதிப்பில் நடைபெற்றுவரும் குளம் வெட்டும் பணிகளை மாவட்ட ஆட்சியர் திருமதி ப்ரியா ரவிச்சந்திரன் இன்று ஆய்வு செய்தார்.***

***------------------***

***பள்ளிக்கல்வித்துறை சார்பில் மாணவ, மாணவியர் உயர்கல்வி சேர்க்கைக்கான சிறப்பு குறைதீர் முகாம் சென்னை மாவட்ட ஆட்சியர் திருமதி மாலதி ஹெலன் தலைமையில் இன்று நடைபெற்றது.***

***-----------------***

***சென்னை எழும்பூர் திருச்சி சோழன் விரைவுரயில், வரும் 26 மற்றும் அடுத்த மாதம் 2-ஆம் தேதி கடலூர் – கும்பகோணம் – தஞ்சாவூருக்கு பதிலாக, விருதாச்சலம் வழியாக திருச்சி சென்றடையும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.***

***<<<<<<>>>>>>>***

***பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு நிறுவனத்தின் தெற்கு மண்டல கேரம் போட்டி ஆவடியில் இன்று தொடங்கியது.***

***இப்போட்டிகளை, ஆவடியில் உள்ள பாதுகாப்பு அமைச்சகத்தின் போர் வாகன ஆராய்ச்சி மேம்பாட்டு மையத்தின் இயக்குநர் திரு ராஜேஷ்குமார் தொடங்கிவைத்தார்.***

***<<<<<<>>>>>>>***

***<u>விளையாட்டுச் செய்திகள்</u>***

***ஸ்பெயின் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Aryan Sha – Sai Karthik Reddy இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.***

***ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 6-4, 6-2 என்ற செட் கணக்கில், ஸ்பெயினின் Alejandro Melero – ரஷ்யாவின் Pavel Lagutin இணையை வென்றது.***

***------------------***

***தமிழ்நாடு பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் திண்டுக்கல் - திருப்பூர் அணிகள் இன்று மோதுகின்றன.***

***திண்டுக்கல்லில் நடைபெறும் இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.***

***<<<<<<END>>>>>>>***